
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 247 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 06 புதன்கிழமை (23.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## பாராளுமன்றில் நேற்று பரபரப்பு பதாகைகளுடன் எதிரணி போராட்டம்

(கொழும்பு)

பாராளுமன்ற நேற்றைய அமர்வின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று பாராளுமன்றில் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

மாத்தளை, எல்கடுவ பிரதேசத்தில் இருந்து மூன்று தோட்ட குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதாகைகளை ஏந்தியவாறு இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாத்தளை - எல்கடுவ ரத்வத்தையில் உள்ள அரச தோட்டமொன்றைச் சேர்ந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரை தோட்ட பிரதி முகாமையாளர் விரட்டி அவர்களின் வீடுகளை இடித்த சம்பவம் காரணமாக பாராளுமன்றத்தில் கடும் அமளி ஏற்பட்டது.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் 15

## மாரடைப்பாலேயே இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் நேற்று முன்தினம் உயிரிழந்த இளைஞன் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்தார் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞன் போதைப் பாவனையால் உயிரிழந்ததாக 15

## சரசாலையில் இளைஞன் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலை வடக்கு பகுதியில் 33 வயதான இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க் கிழமை காலை அவரது வீட்டின் பின்புறமாக 15

# வாகனத்தில் வைத்து கொளுத்துவோம்

### தமிழர் தரப்பை மிரட்டிய சிங்களவர்கள் மட்டக்களப்பில் பெரும் பரபரப்பு

(மட்டக்களப்பு)

- சர்வ மதத் தலைவர்கள் மற்றும் ஊடக வியலாளர்களை சிறைபிடித்த பிக்கு தலைமையிலான காணி அபகரிப்பு குழு.
- வாகனத்தில் வைத்து உங்கள் அனைவரையும் கொளுத்துவோம் என எச்சரிக்கை.

(15ஆம் பக்கம் பார்க்க)



## 5 நாள் காய்ச்சல் 8 நாள் சிசு மரணம்

### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஐந்து நாள் காய்ச்சலினால் பிடிக்கப்பட்டிருந்த எட்டு நாள் ஆண் சிசு ஒன்று சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

நயினாதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆண் சிசுவுக்கு கடந்த 15

## குருந்தூர் விவகாரம் பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் செயல்

### பாராளுமன்றில் சரத் வீரசேகர



(கொழும்பு)

குருந்தூர்மலையில் நடைபெற்ற விவகாரமானது பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் செயல் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதவான் அனுமதி வழங்கியமை தொடர்பாக பாராளுமன்ற 15

## சட்டத்தை கையில் எடுத்தால் கடுமையான சட்டநடவடிக்கை



### அமைச்சர் டிரான் அலஸ்

(கொழும்பு)

எவரேனும் சட்டத்தை கையில் எடுத்து செயற்பட்டால் அல்லது ஆதரவளித்தால், அத்தகைய தனி நபர் அல்லது அமைப்புக்கு எதிராக அந்தஸ்து பாராமல் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பொது பாதுகாப்பு அமைச் 16

## சிங்கப்பூர் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு



(சிங்கப்பூர்)

சிங்கப்பூருக்கான இருநாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் லீ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.07.2023 புதன்கிழமை அன்று இறைபதம்
அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சுப்பிரமணியம் தில்லையம்பலவாணர்

(சமாதான நீதவானும் இளைப்பாறிய பிறப்பு இறப்பு பதிவாளரும்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 23.06.2023ஆம் திகதி புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 25.08.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடை பெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக் குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

மாளிகை வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(16802)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனாவில் குருதித் தட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என இரத்த வங்கி தெரிவித்துள்ளது.**

நாளுக்கு நாள் குருதி விநியோகம் அதிகரித்துச் செல்வதினால் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாதுள்ளது.

ஆகவே 18 - 55 வயதிற்கு இடைப்பட்ட, 50 Kg உம் அதற்கு மேற்பட்ட நிறையும் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் எவ்வித பிரச்சினையுமின்றி இரத்த தானம் செய்யலாம்.

ஏற்கனவே இரத்ததானம் செய்தவர்கள் எவ்வித நோய்களுமின்றி இருந்தால் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம்.

எனவே தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் நிறைவடைந்தவர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்புவர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் உங்கள் ஊர்களிலும் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து எமக்கு அறிவித்தால் நாம் வருகை தந்து குருதியை சேகரிக்கும் பணிகளை முன்னெடுப்போம்.

இது தொடர்பில் மேலதிக தகவல்களுக்கு 077 210 5375/ 021 222 3063 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-6-33)

# கார்-டிப்பர் மோதி விபத்து



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ32வீதியில் சங்குப்பிட்டி பாலத்தை அண்மித்த பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை காருடன் டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது எவருக்கும் காயங்கள் எவையும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# வட இலங்கை சங்கீத சபையின் அறிமுகப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையினால் 2023 ஆம் ஆண்டுக்கான அறிமுக பரீட்சைகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் படி எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் கீழ்குறிப்பிட்ட நேர சூசிகையில் நடைபெறவுள்ளது என சங்கீத சபை தலைவர் பொ.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். (4-6)

| திகதி | பாடம் | தரம் | நேரம் | |
|---|---|---|---|---|
| | | | காலை | மாலை |
| 26.08 | சங்கீதம் | 2.3.4.5 | 8.30-11.30 | |
| | சங்கீதம், பரதம், மிருதங்கம், பண்ணிசை, நாடகம் | 6 பகுதி I | 8.30-11.30 | |
| | மிருதங்கம் | 2.3.4.5 | | 13.00-16.00 |
| 27.08 | பரதம் | 2.3.4.5 | 8.30-11.30 | |
| | சங்கீதம், பரதம், மிருதங்கம், பண்ணிசை, நாடகம் | 6 பகுதி II | 8.30-11.30 | |
| | பண்ணிசை, நாடகமும் அரங்கியலும் | 2.3.4.5 | | 13.00-16.00 |

# மின்னியல் முச்சக்கரவண்டி டக்ஸி சேவை யாழிலும்




(யாழ்ப்பாணம்)

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் தனது முன்மாதிரித் திட்டமான ஈ-ட்ரைவ் மின்னியல் முச்சக்கரவண்டி டக்ஸி சேவையை யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரிப்பதாக அறிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சூழலுக்கு நட்பான மற்றும் செலவுச் சிக்கனமான போக்குவரத்துத் தீர்வை வழங்கும் ஈ-ட்ரைவ் திட்டம் யாழ்ப்பாண நகரத்துக்கும் தற்பொழுது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் வீதியில் செல்லும் ஈ-ட்ரைவ் மின்னியல் டக்ஸியை இலகுவில் நிறுத்திக் கொள்ள முடியும் அல்லது 077 806 8060 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி இச்சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த முச்சக்கர வண்டிகள் ஒரு கிலோமீற்றருக்கு 90 ரூபாய் என்ற நேரடியான கட்டணத்தைக் கொண்டிருப்பதுடன், நெரிசல் நிறைந்த நேரத்துக்கான கட்டணம் (peak hour) போன்ற எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படாது. (4-6)

# 'சில்ப அபிமானி' 2023 தேசிய கைப்பணி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கைப்பணியாளர்களை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைகள் பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும் கண்காட்சிப் போட்டி இவ் வருடமும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என வடமாகாண தொழிற்துறைப்பணிப்பாளர் வனையா செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

மாகாண மட்டப் போட்டிகள் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தினால் டிசெம்பர் மாதம் 4, 5 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன. இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள கைப்பணியாளர்கள் விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்வதுடன் போட்டிக்கு சமர்ப்பிக்கவுள்ள ஆக்கங்களை நவம்பர் மாதம் 3 ஆம் வாரம் பிரதேச செயலகங்களில் ஒப்படைப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

போட்டிக்கான பிரதான கைப்பணித் துறைகளாவன களிமண் சார்ந்த ஆக்கங்கள், உலோக கைப்பணிப் பொருட்கள், கைத்தறி நெசவு உற்பத்திகள், சங்கீத உபகரணங்கள், துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருட்கள், பற்றிக், ரேந்தை, மரம் சார்ந்த ஆக்கங்கள், தோற்பொருட்கள், கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள், பாரம்பரியக் கலை வரைபுகளும் சிற்பங்களும், தென்னை, பனை, கித்துள் சார்ந்த உற்பத்திகள், கடதாசி மற்றும் பஸ் சார்ந்த ஆக்கங்கள், சிப்பி ஓடுகள். நானாவித கைப்பணிப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் என்பனவாகும். (4-6)

# தமிழக அறிஞர்களின் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

புனைவும் வரலாறும் என்ற தலைப்பில் இரு கருத்துரைகள் யாழ்.பல்கலை நுண்கலைத் துறையினரின் ஏற்பாட்டில் நாளை 24 ஆம் திகதி மாலை 5 மணிக்கு யாழ்.பல்கலை கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச கணிப்பைப் பெற்ற தமிழ் எழுத்தாளரான பெருமாள் முருகன் மற்றும் சென்னை வளர்ச்சி நிறுவனத்தைச் சார்ந்தவரும் முக்கியமான பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளவருமான வரலாற்றாசிரியரான பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், வாசகர்கள் மற்றும் ஆய்வாளர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் தா.சனாதனன் அறிவித்துள்ளார். (4-5)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் முருகன் உற்சவ கால தெய்வீக இசை அரங்கில் பக்தி இசை நாளை 24 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்போது சோமசுந்தரம் சந்திரசேகரம் பாட்டுப் பாடவுள்ளதுடன் இ. நிரோஜன் வயலினும் ந. செல்வச்சந்திரன் கீபோட்டும் வ. ரமணசர்மா மிருதங்கம் மற்றும் வே. பிரபாகர சர்மா தபேலாவுடன் இணைந்து இசைக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இரவு 7.25 மணிக்கு வயலின் இசை இடம் பெறவுள்ளது. இதில் பத்மநாதன் சியாம் கிருஷ்ணா வயலினும் ஞா.வசந் மிருதங்கம் மற்றும் கு.தேசிகன் கடம் இசைக்கவுள்ளனர். (4-6)

# மரக்கறி நாற்றுக்களின் உற்பத்தி, பராமரிப்பு பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் நாற்று மேடை மூலம் மரக்கறி நாற்றுக்களின் உற்பத்தியும் அவற்றின் பாராமரிப்பும் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

எனவே மேற்படி துறையில் சுயதொழில் உருவாக்கத்தினை மேற்கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் மற்றும் விவசாயிகளை கலந்து பயன் பெறுமாறும் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் 021 226 4958 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலியில் மாட்டுவண்டி சவாரிப் போட்டி





இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தி வரும் பல்வேறுபட்ட நிகழ்வுகளின் வரிசையில் தங்கப் பதக்கத்தை பரிசாக கொண்ட மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப்போட்டி, கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி சவாரித்திடலில் நடை பெற்றது.

அண்மைக்காலங்களில் யாழில் நடைபெற்ற போட்டிகளில் அதிகூடிய மாட்டு வண்டில் சோடிகள் பங்கு கொண்ட போட்டியாக 98 காளைச் சோடிகள் பங்கு கொண்டதுடன் யாழின் பலபாகங்களில் இருந்தும் இப்பாரம்பரிய விளையாட்டைக் காண்பதற்கு ஆயிரக்கணக்கான பார்வையாளர் திரண்டிருந்தனர். (4-6)



வடமாகாண பாடசாலை மட்ட மரதன் ஓட்டப் போட்டி நேற்றுக் காலை முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆரம்பித்து குமுழமுனை மகா வித்தியாலய முன்றலில் நிறைவடைந்தது.

குறித்த போட்டியில் 200 இற்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

இதில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் வெற்றியீட்டிய வீர. வீராங்கனைகளுக்கு கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார்.

(படம்:-தேவானந்தன்)

## ஜோகோவிச் சம்பியன்

செர்பிய டென்னிஸ் நட்சத்திரம் நோவாக் ஜோகோவிச் சின்சினாட்டி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

அமெரிக்காவில் நடந்த சர்வதேச சின்சினாட்டி ஓபன் டென்னிஸின் இறுதிப் போட்டியில் ஜோவாக் ஜோகோவிச் மற்றும் கார்லஸ் அல்காரஸ் மோதினர்.

பரபரப்பாக நடந்த இந்தப் போட்டி 3 மணி 49 நிமிடங்கள் நீடித்தது. ஒரு கட்டத்தில் அல்காரஸ் 6-5 என்ற செட் கணக்கில் முன்னிலை வகித்தார்.

ஆனால், ஜோகோவிச் அடுத்தடுத்து புள்ளிகளை எடுத்து அந்த செட்ஐ தன தாக்கினார்.

இறுதியில் 5-7, 7-6 (9-7), 7-6 (7-4) என்ற செட் கணக்கில் அல்காரசை வீழ்த்தினார் ஜோகோவிச். இது அவரது 39 ஆவது மாஸ்டர்ஸ் கிண்ணம் ஆகும். (4)


**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாள் மற்றும் பெயின்ரர் தேவை.

(C-7117)

**076 586 4967**
**075 592 5371**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**
**076 097 3127**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை (3 இலட்சம் ரூபாய்)
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

(16810)

**076 057 0354, 076 826 0354**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நுணாவில் காப்பற் வீதி முகப்புடன் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 வீதியில் இருந்து கனகம்புளியடி சந்தி செல்லும் பிரதான காப்பெட் வீதி
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், மட்டுவில் மகாவித்தியாலயம் 1 Km தூரம்
- குடியிருப்பு சூழல் கொண்ட தொகுதி

(16810)

**077 638 5683, 076 755 8606**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16810)

தொடர்புகளுக்கு:- குரு

**077 874 3204, 077 288 0152, 077 076 0389**


## மரண அறிவித்தல்



பிறப்பு 22 - 10 - 1955

இறப்பு 20 - 08 - 2023

### திருமதி தனபாலசிங்கம் யோகேஸ்வரி (ராசு)

வறுத்தலைவிளான் களையிட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் யோகேஸ்வரி(ராசு) அவர்கள் கடந்த (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தனபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் பிரதீப், பானுகா, யகோபன், டிசாந் ஆகியோரின் அன்பு தயாரும் ரஜீவன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமியாரும் குணதாசன் அவர்களின் அன்பு சகோதரியும் யோகாதேவி, சுப்பிரமணியம், சரஸ்வதி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கிஷோத்திரா, சாய்பூசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2023) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தனபாலசிங்கம்(கணவன்) : 074 377 9036
பானுகா(மகள்) : 077 249 6034

(16811)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பாரிய அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் 860,000 இற்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்டில் 20 நாட்களில் 98,831 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அவ்வகையில், இந்தியாவில் இருந்து அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் சீனாவில் இருந்தும் 35,000 இற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் இந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தந் துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-5)

# நிலத்தடி நீரில் மாற்றங்கள் தென்பட்டால் நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட வேண்டும்

## நீர் வழங்கல் சபை அறிவுறுத்து

(கொழும்பு)

**கடும் வறட்சியான காலநிலை காரணமாக நிலத்தடி நீரைப் பயன்படுத்துவோர் மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்வழங்கல் சபை தெரிவித்துள்ளது.**

நீர்வழங்கல் சபையின் பிரதி முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு) ஆர். எம். எஸ். ரத்னாயக்க இது தொடர்பில் தெரிவிக்கையில், நிலத்தடி நீரின் சுவை, மணம் அல்லது நிறத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், நீர் மாதிரிகளைப் பரிசோதிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

நிலத்தடி நீர் மட்டம் குறைவதால் உப்புத் தன்மையில், மாற்றம் ஏற்படக் கூடும் என்பதால் மக்கள் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிலத்தடி நீரில் அவ் வாறான மாற்றம் ஏற்பட்டால் யாழ்ப்பாணம், கொழும்பு, புத்தளம் மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பரிசோதனை கூடங்களில் நீர் மாதிரிகளை மக்கள் பரிசோதிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 9 பேரும் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல் மேற்கொள்ளுதல், பெற்றோல் குண்டு அடித்தல், பொருட்களுக்கு சேதம் விளைவித்தல், வாகனங்களை தீயிட்டு எரித்தல் போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் வழிகாட்டலில், யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினர் மேற்படி சந்தேகநபர்களை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)



மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தொடர்ச்சியாக பல்வேறு வெற்றிகளைப் பெற்று வரும் AA SUPER KINGS அணியினால் மன்னார், தாராபுரம் அல்-ஜின்னா விளையாட்டுக்கழகத்திற்கு ஒரு லட்சம் பெறுமதியிலான கடினப்பந்து, கிரிக்கெட் உபகரணங்கள் நேற்று முன்தினம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்-ஜோசப்நயன்)

# புராதன சின்னங்கள் மதங்களுக்குரியவை அல்ல

## அமைச்சர் விதுரவிக்ரமநாயக்க



(கொழும்பு)

நாட்டின் புராதன சின்னங்களை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பாக கையளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முல்லைத்தீவு, குருந்தூர் மலை விவகாரம் தொடர்பாக இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் கூறப்போகும் கருத்துக்கள், அந்த வழக்குகளுக்கு சாதகமாவோ, பாதகமாகவோ கூட மாறலாம்.

எனவே, வழக்கு விசாரணைகள் இடம்பெறும் ஒரு விடயம் தொடர்பாக என்னால் பாராளுமன்றில் கருத்து கூற முடியாது.

இந்நாட்டை பொறுத்தவரை புராதனச் சின்னங்கள், நாடளாவிய ரீதியாக பல இடங்களில் காணப்படுகின்றன.

பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதத்திற்கு இவை உரியதா என்பதல்ல பிரச்சினை.

இந்தப் புராதனச் சின்னங்களின் பெருமையை நாட்டுக்கு மட்டுமன்றி, முழு உலகிற்கும் காண்பிக்க வேண்டும்.

எதிர்கால சந்ததியினருக்கு நாம் இவற்றை பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும்.

இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளத் தயாராக உள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# இராசிபலன்

23.08.2023
ஆவணி 06, புதன்கிழமை
சப்தமி முன்னிரவு 11.04 மணிவரை
விசாகம் பின்னிரவு 5.38 மணிவரை

சுபநேரம் -4.35-6.05 மணிவரை
இராகுகாலம்-12.05-1.32 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- அச்சுவினி.

வளவன்

**மேஷம்:** உறவினர், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**ரிஷபம்:** கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உடல்நலனில் முன்னேற்றமுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் நண்பர்கள் வழியில் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** ஊர் மாற்றம் இடமாற்றம் என்பன இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ரோக பயமுண்டு.

**மிதுனம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கன்னி:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு.

**தனுசு:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மீனம்:** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

அருமை அறியாதவன் வீட்டுக்குப் போனால் பெருமை குறைந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலை தொடர்பில் மதக்கலவரம் சாத்தியம்

## இந்திய புலனாய்வு பிரிவின் எச்சரிக்கையை அலட்சியம் செய்ய வேண்டாம் என கோரிக்கை

(கொழும்பு)

**குருந்தூர் மலையை அடிப்படையாக வைத்து எவ்வேளையிலும் இனக்கலவரம் மூளலாம் என்ற இந்திய புலனாய்வு பிரிவின் எச்சரிக்கையை அலட்சியம் செய்ய வேண்டாம் என உள்நாட்டு புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளதாக தென்னிலங்கை நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.**

முல்லைத்தீவு குருந்தூர் மலையை அடிப்படையாக வைத்து இனக்கலவரத்தை தூண்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினர் மற்றும் தனிநபர்கள் குறித்து தகவல்களை திரட்டுமாறும் எச்சரிக்கையாகயிருக்குமாறும் உள்நாட்டுப் புலனாய்வு அமைப்புகள் தங்கள் புலனாய்வாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளன.

குருந்தூர் மலை தொடர்பில் உடனடி மதக்கலவரம் சாத்தியம் என்ற இந்திய புலனாய்வு பிரிவினரின் எச்சரிக்கையை தொடர்ந்தே உள்நாட்டு புலனாய்வு அமைப்புகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

குருந்தூர் ஆலயப் பகுதியினை உரிமை கொண்டாடுவதற்காக பௌத்த-இந்து உணர்வுகளை பயன்படுத்தும் அனைத்துத் தரப்பினரையும் கண்காணிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு புலனாய்வுப் பிரிவுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மீண்டும் இனக்கலவரத்திற்கான வலுவான வாய்ப்புகள் உள்ளன. இந்த வன்முறைகள் 2019 தேர்தலிற்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைகளை விட மோசமான வையாகக் காணப்படலாம் என இந்தியப் புலனாய்வு பிரிவினர் விடுத்துள்ள எச்சரிக்கையை இந்திய பத்திரிகைகள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## எரிவாயு விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

இலங்கையில் சமையல் எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் ஏற்பட்டிருந்த விலை அதிகரிப்புக்கு அமைவாக, கடந்த மாதமே சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவிருந்தது.

எனினும், இறுதி நேரத்தில் இந்த விலையேற்றம் கைவிடப்பட்ட நிலையில், இம்மாதம் அதனை அதிகரிக்கும் எண்ணத்தில் லிட்ரோ நிறுவனம் இருப்பதாக தெரியவந்துள்ளது.

அதற்கமைய இந்த விலை உயர்வு உள்ளூர் சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலை இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## இதுவரை 600 பேராசிரியர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றம்


(கொழும்பு)

நாட்டில் இருந்து வெளியேறும் பேராசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த 7 மாத காலப்பகுதியில் மாத்திரம் பல்கலைக்கழகங்களின் 600 பேராசிரியர்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர் என பல்கலைக்கழக பேராசியர்கள் சம்மேளனத்தின் தலைவர் பரண ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கட்டமைப்பில், 12 ஆயிரம் பேராசிரியர்கள் இருக்க வேண்டும் என்கின்ற போதும் 6 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே கடமையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## தொடரும் மருந்து தட்டுப்பாடு



(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத் துறை கடுமையான சவால்களை எதிர்நோக்கி வரும் நிலையில் தொடர்ந்து 216 மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மருந்துத் தட்டுப்பாடானது குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ள போதிலும் மீதமுள்ள பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்து 216 என்ற குறித்த எண்ணிக்கையை எதிர்வரும் மாதங்களில் 100 ஆகக் கொண்டுவர வேண்டும் எனவும் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| தக்காளி | 180 | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 220 | 250 | 250 |
| கரட் | 350 | 400 | 450 | 450 |
| பூசணி | 80 | 120 | 100 | 100 |
| புடோல் | 80 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 350 |
| வெண்டக்காய் | 80 | 80 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 160 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 180 | 200 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 80 | 140 | 150 |
| கறிமிளகாய் | 300 | 350 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 180 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 450 | 500 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 300 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 100 | 80 | 100 |

### அதிகரிக்கும் வெப்பநிலை

## நீராகாரங்களை அதிகளவாக சிறுவர்களுக்கு வழங்குங்கள்

### சுகாதார அமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)

நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சிறுவர்கள் வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதிகளவில் வியர்வை வெளியேறுவதால் நீர்ச்சத்து குறைவடையும் வாய்ப்பு உள்ளதாக பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்காரணமாக நீர், இளநீர், தேசிக்காய் சாறு, தோடம்பழம், மாதுளம்பழம், ஜீவனி போன்ற நீராகாரங்களை சிறுவர்களுக்கு அதிகமாக வழங்குமாறும் பெற்றோர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி-5)

### இதய நோயாளர்களின் எண்ணிக்கை

## நாளாந்தம் அதிகரிப்பு

### ஒரு நாளில் 170 பேர் பதிவாவதாக சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் இதய நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாக இருதய நோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி நாளாந்தம் சுமார் 170 இதய நோயாளிகள் பதிவாகுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

மேலும் இலங்கையில் கடந்த 10 வருட காலமாக மாரடைப்பினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இது தற்போது உட்கொள்ளும் உணவு முறைமை காரணமாகவே ஏற்படுகின்றது.

எனவே தாம் உட்கொள்ளும் உணவு குறித்து அதிக அவதானம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலுவைக் கட்டணம் செலுத்தாததால்
# 5,000 பேருக்கு மின் துண்டிப்பு

(கொழும்பு)

இலங்கை முழுவதும் சுமார் 5 ஆயிரம் நுகர்வோருக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாதாந்த மின்சாரக் கட்டணத்திற்கான நிலுவைத் தொகையை செலுத்தாததன் காரணமாகவே இவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் மின்சார விநியோகத்தை சீரமைக்குமாறு விண்ணப்பித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அத்துடன் 10% மின்சார இணைப்புகளை மீண்டும் பெறாமல் மக்கள் இருளில் உள்ளனர் என்றும் இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)


**Invitation for Bids (IFB-2023/03)**

**Department of Irrigation, Northern Provincial Council.**

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் PSDG, Recurrent நிதி மூலங்களின் 8 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இக் கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 19.08.2023 வெளிவந்த Daily News பத்திரிகை பக்கம் 7 இல் பார்வையிடவும்.

மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

(சி-711)



**அமெரிக்கா, மெக்சிக்கோ பல்கலைக்கழகம் பயணமானார்**



தென்மராட்சி கல்வி வலய முன்னாள் முன்பள்ளி கல்விப் பணிப்பாளர்
திரு.பாக்கியராசா அவர்களின் மகன்

Congratulations

**டாருகீசன்**

Best Wishes

பொறியியல் துறையில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொள்வதற்கு மெக்சிக்கோ பல்கலைக்கழகம் புறப்படுவதற்கு முன்பாக கச்சாய் கண்ணகை அம்மன் தேவஸ்தான பிரதமகுரு ச.தம்பு அவர்களினால் வினோபா நூலகம் சார்பாக மேற்படி மாணவனுக்கு அவரது பெற்றோர் முன்னிலையில் பொன்னாடை போர்த்தி கௌரவித்த வைபவத்தை படத்தில் காணலாம்.

(c-7112)

வாழ்த்துவோர் : **நண்பர்கள் குழாம், வினோபா நகர், கச்சாய்.**



**மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்**



**திருமதி. செல்வமலர் இராஜன்**

(SLTS-I, பகுதித்தலைவர்)

**சேவை விபரம்**

யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
01.12.1989-17.01.1994
யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
18.01.1994-31.12.1995
யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
01.01.1996-09.05.2010
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
10.05.2010-22.08.2023

எமது பாடசாலையில் ஆசிரியையாக, ஆரம்ப கல்விப்பிரிவு பகுதித்தலைவராகக் கடமையாற்றி 22.08.2023 ஓய்வு பெற்று 23.08.2023 இன்று மணிவிழாக் காணும் திருமதி.செல்வமலர் இராஜன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.


(16798)



DP AVIATION
David Pieris Aviation (Pvt.) Ltd.

70 நிமிடங்களில்
**யாழ்ப்பாணத்திற்கு பறந்திடுங்கள்**



நம்பமுடியாத அறிமுக விலை

ஒரு வழி ரூபா 22,000
இரு வழி ரூபா 41,500

எங்களின் நவீன குளிரூட்டப்பட்ட செஸ்னா 208 கிராண்ட் கேரவன் எக்ஸிகியூட்டிவ் வசதியில் விரைவாகவும் பாதுகாப்பாகவும் பயணிக்கலாம்

| தினம் / நாள் | இரத்மலானையிலிருந்து வெளியேறுதல் | யாழ்ப்பாணத்தைச் சென்றடைதல் | யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுதல் | இரத்மலானையைச் சென்றடைதல் |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை | 0800 Hrs. | 0910 Hrs. | 0940 Hrs. | 1050 Hrs. |
| ஞாயிற்றுக்கிழமை | 1500 Hrs. | 1610 Hrs. | 1640 Hrs. | 1750 Hrs. |
| செவ்வாய்க்கிழமை | 0800 Hrs. | 0910 Hrs. | 0940 Hrs. | 1050 Hrs. |
| வியாழக்கிழமை | 0800 Hrs. | 0910 Hrs. | 0940 Hrs. | 1050 Hrs. |

கொண்டு செல்லக்கூடிய பொதியின் அளவு 7kg. மேலதிக பயண பொதிகளை கொண்டுசெல்ல PPT Travels யுடன் தொடர்பு கொள்ளவும்

(c-2099)

**0770 555 444** | அல்லது PPT TRAVELS ஐத் தொடர்புகொள்ளவும்

கொழும்பு 06 - இல. 296 A1, காலி வீதி, வெள்ளவத்தை - 077 57 55 175 | 011 23 64 999
கொழும்பு 13 - இல. 153, ஆட்டுப்பட்டித்தெரு - 076 44 08 954 | 011 23 20 336
யாழ்ப்பாணம் - இல. 183, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் - 077 57 31 318 | 021 22 28 829
பருத்தித்துறை - அரசடி வீதி, பருத்தித்துறை - 077 57 36 003 | 021 22 65 338
திருமுறுகண்டி - A9 வீதி, திருமுறுகண்டி - 076 44 08 952 | 021 22 84 829

நிபந்தனைகளுக்குட்பட்டது

DP ஏவியேஷன் சார்பாக ஃபிட்ஸ்யார் (FitsAir) இனால் விமானங்கள் இயக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரியில் தண்ணீர் திறக்க கூடாது

# கர்நாடகாவில் பா.ஜ.க போராட்டம்

(டில்லி)


**தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடும் காங்கிரஸ் தலைமையிலான கர்நாடக அரசுக்கு எதிராக மாண்டியாவில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சி கர்நாடக விவசாயிகளின் நலனுக்கு எதிரானது என்றும் தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர்.**



தமிழகத்துக்கு தண்ணீர் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மண்டியாவில் சாலை மறியல் செய்த பா.ஜ.கவினர், அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

மாண்டியாவைச் சேர்ந்த பாஜக ஆதரவு சுயேட்சை எம்.பி சுமலதா அம்பரீஷும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, விவசாயிகள் தண்ணீரின்றி தவித்து வரும் நிலையில், மற்ற மாநிலங்களுக்கு அரசு எப்படி தண்ணீர் விட முடியும் என்று கேள்வி எழுப்பினார். அவர், "இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும். அரசு கர்நாடக விவசாயிகளின் நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஆதரவாக அரசு முடிவு எடுக்கும் வரை போராட்டம் தொடரும்" என்றார்.

காங்கிரஸ் கட்சிக்கு விவசாயிகள் மீது அக்கறை இல்லை என்றும் தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான தி.மு.கவின் நலன்களுக்காக மட்டுமே அம்மாநிலத்துக்கு தண்ணீர் திறந்து விடுவதாகவும் பா.ஜ.க குற்றம் சாட்டியுள்ளது. (நி-5)



# சந்திராயன் 3 ஐ இன்று தரையிறக்க திட்டம்?

(டில்லி)

சந்திரயான் 3 விண்கலத்தின் லேண்டரை இன்று நிலவில் தரையிறக்க முடிவு செய்திருப்பதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நிலவின் தென்துருவப் பகுதியை ஆய்வு செய்வதற்காக கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி பூமியிலிருந்து சந்திரயான் -3 விண்கலம் ஏவப்பட்டது.

பூமியின் சுற்றுவட்டப் பாதையை கடந்து, தற்போது நிலவின் சுற்றுவட்ட பாதையில் உள்ள சந்திரயான் -3 விண்கலத்தில் இருந்து விக்ரம் லேண்டர் கடந்த 17 திகதி வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டது.

தற்போது நிலவுக்கு வெகு அருகில் சுற்றி வரும் சந்திரயான் விண்கலத்தின் லேண்டரை இன்று நிலவில் தரையிறக்கத் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி இன்று மாலை இலங்கை நேரப்படி 5.20 மணி முதல் 6.4 மணியளவில் விக்ரம் லேண்டர் தரையிறக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சீனா விண்ணில் செலுத்திய புதிய செயற்கைக் கோள்

(பீஜிங்)

புதிய செயற்கைக் கோளை விண்ணில் சீனா செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மார்ச்-4சி என்னும் ரொக்கெட் கோபேன்-12 04 என்ற செயற்கைக் கோளை சீனா செலுத்தியுள்ளது.

இதேவேளை குறித்த செயற்கைக் கோள் காலநிலை கண்காணிப்பு, அனர்த்த மேலாண்மை குறித்து புதுப்பிக்கத்தக்க தகவல்களை பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஆளில்லா விமானங்களை இயக்க ரஷ்ய மாணவர்களுக்கு பயிற்சி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் பாடசாலை மாணவர்களுக்கு ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்படி 15 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கே இவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு எதிரான போரினை அடிப்படையாக கொண்டு இந்த நடவடிக்கையினை ரஷ்யா முன்னெடுத்துள்ளது.

கடந்த ஆண்டு, உக்ரைன் போருக்கு மத்தியில் 2023 முதல் மாணவர்களுக்கு சோவியத் பாணியில் இராணுவப் பயிற்சியை மீண்டும் அறிமுகப்படுத்துவதாக மொஸ்கோ அறிவித்தது. பாடசாலைகளில் இது போன்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவது, எதிரியுடனான மோதலுக்கு மக்களை முறையாக தயார்படுத்துவதை சாத்தியமாக்கும் என அந்நாட்டு அதிகாரிஒருவர் கூறியுள்ளார். (நி-5)




## நற்கருணை பொழிந்திடு நல்லைக் குமரனே!

வேல் கொண்டு வினை தீர்க்கும்
வெற்றிவேலவா நல்லூர்க் கந்தனே
பாராண்ட பைந் தமிழினமுமோ
படும் வேதனைகள் விலக்கிடுவாயே
நாளும் உனையே நினைந்துருகிடுவோர்க்கு
நற்கருணை பொழிந்திடு நல்லைக்குமரனே

தங்கத்தமிழன்,
காரைநகர்.

## தீப்பொறியில் தோன்றியவனே


தீயாத்தோன்றி ஒளிதருவாய் நல்லூர் வேலவனே
முருகா என்று அழைக்க உருகும்- உன் மனம்
வந்த வினை அகற்றி-
பஞ்சம் போக்கி
ஆணவம் அழித்து
எல்லையில்லா இன்பம் தந்து - எமை காத்திடவே
பணக்காரக் கந்தனாய் நல்லூரில் குடிகொண்ட -
நல்லைக்குமரா
உனை வேண்டி உனதருள் துணைக்கு ஏங்கி
உள்ளம் அழுதல் இன்றி
மனதிற்கு நிம்மதி ஏது முருகா- இடரகற்றிடவே
இளங்குமரனாய்
தீயாகத்தோன்றி ஒளிதருவாய் வேலவனே
பார் எல்லாம் உன் புகழ் பொலிந்திடுவாய்.

லோ.சிவதர்ஷினி,
உரும்பிராய்.

## நல்லையம்பதியை ஆளும் வேலவனே

ஓம் எனும் பிரணவப் பொருளே
ஓதுவார் உள்ளத்தொளிக்கும் ஒளியே
ஆறாத் துன்பம் அழிக்கும் அருளே
ஆவடு துறை அரனின் அழகே
நாடுவார் குறைகளையும் கடலே
பாடுவார் தினம் விளையும் திடலே
நல்லையை நாளும் ஆளும் வேலே
நல்லருள் நல்க வந்திடு வாயே

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்,
மறவன்புலவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி தருமபுரத்தில் காற்றுடன் கூடிய மழை

## இரு வர்த்தக நிலையங்கள் சேதம்



(தருமபுரம்)

தருமபுரம் பகுதியில் திடீரென ஏற்பட்ட காற்றுடன் கூடிய மழை காரணமாக இரண்டு வர்த்தக நிலையங்களில் கூரை தூக்கி வீசப்பட்டுள்ளன.

கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் நேற்று திடீரென ஏற்பட்ட காற்றுடன் கூடிய மழை பெய்ததன் காரணமாக இரண்டு வர்த்தக நிலையங்களின் கூரை முற்று முழுதாக தூக்கி வீசப்பட்டுள்ளன.

கடையினுள் இருந்த பெறுமதி வாய்ந்த பல பொருட்கள் முற்றும் முழுதாக மழையில் நனைந்து நாசமாகி உள்ளன. நாளாந்த ஜீவனோபாயத்திற்காக நடத்தப்பட்டு வந்த வர்த்தக நிலையத்தில் தற்போது ஏற்பட்ட இழப்பு காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.(4-6-316)

# தெய்வீக திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீக திருக்கூட்டம் இன்று மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திருமுன்னிலையில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அனிருத்தனன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் வேலணை பிரதேச செயலாளர் க.சிவகரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (4-6)

# ஹெரோயினுடன் கைதான மூவரும் விளக்கமறியலில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட மூவரையும் 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளது.

சாவகச்சேரி நகர் பகுதியில் வைத்து 40 மில்லி கிராம் ஹெரோயினுடன் இருவரும் 30 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவரும் கைதான நிலையில் அவர்களை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் நாவற்குழி மற்றும் கல்வயல் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் புத்தூர் ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவில் இடம் பெறவுள்ளது. அதேபோன்று உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாம் அன்றைய தினம் காலை 9 மணிதொடக்கம் ஏழாலை ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத் தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ். போதனா வைத்திய சாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதாரத் திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும். எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-6)

# மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு வடக்கு ஆளுநருக்கு மனு

(அக்கராயன்)

முல்லைத்தீவின் பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் கிராமங்களில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துமாறு வடமாகாண ஆளுநரிடம் அப்பகுதி பொதுஅமைப்புகளினால் நேற்று முன்தினம் மனு கையளிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் இருந்து மேற்படி கிராமங்களில் இருந்து தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மாவட்ட மட்டத்தில் இதற்கான அனுமதிகள் வழங்கப்படாத நிலையில் வவுனியாவுக்கு அப்பால் இருந்து வழங்கப்படுகின்ற அனுமதிகளிலேயே இம் மணல் அகழ்வுகள் நடைபெறுவதாக பல தடவைகள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக தொடர்கின்ற மணல் அகழ்வுகள் காரணமாக கிராமங்கள் பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருவதாகவும் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருவதாகவும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)

# மணல் ஏல விற்பனை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மணல் ஏல விற்பனை இடம்பெற உள்ளதாக நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

காலை 9 மணிக்கு ஏலம் விடப்பட உள்ளதாகவும் குறித்த மணலை ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் பார்வையிட முடியும் என்றும் பதிவாளர் தெரிவித்துள்ளார். (4-6-315)

# தண்ணிமுறிப்பு சம்பவத்தில் கைதான 46 மீனவர்களும் விடுவிப்பு

(நெளுக்குளம்)

தண்ணிமுறிப்பு குள சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 46 மீனவர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில் குறித்த வழக்கு விசாரணைகள் எடுத்து கொள்ளப்பட்ட போது பெரும்பான்மையினத்தை சேர்ந்த மீனவர்கள் சார்பாக தோன்றிய சட்டத்தரணி அத்துமீறிய சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை மன்றுக்கு வழங்கியிருந்தார். அதன் பின்னர் நீதிபதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மீனவர்கள் 46 பேரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், கடந்த 4 ஆம் திகதி தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட குமுமுனை தண்ணிமுறிப்பு மக்களுக்கும் ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் வெலிஓயா பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதை தொடர்ந்து மீனவ சங்கத்தினருக்கும் பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

தண்ணி முறிப்பு குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 சிங்கள மொழிபேசும் மீனவர்களையும் அவர்கள் மீன் பிடிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் குறித்த பகுதி மக்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களில் ஒன்பது பேர் பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தப்பி சென்றிருந்தனர்.

இந்நிலையில். பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபுரம், தண்ணிமுறிப்பு சங்கத்தினை சேர்ந்த மீனவர்களை விசாரணைக்கு என அழைக்கப்பட்ட நிலையில் 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். இதனையடுத்து குறித்த வழக்கானது கடந்த 8 ஆம் திகதி நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டது.

அதன்போது இன , மத கலவரத்தை ஏற்படுத்தியவர்கள் என பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்ட பின்னர் 14 நாட்கள் தடுப்புகாவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் நேற்று அனைவரும் விடுவிக்கப்பட்டனர். (4-6-239)

# வேரவில் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி வேரவில் பிரதேச வைத்தியசாலைக்கு இன்னொரு வைத்தியரை நியமிப்பதற்கு வடமாகாண சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களைச்சேர்ந்த 1,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற இப்பிரதேசத்தில் வேரவில் பிரதேச வைத்திய சாலையே இயங்கி கொண்டு உள்ளது.

இவ்வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டும் பணியில் இருப்பதன் காரணமாக வெளிநோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தே சிகிச்சை பெற்று செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

தற்போது பணியில் உள்ள வைத்தியர் விடுமுறையில் செல்லும் போது அருகில் உள்ள வைத்தியசாலையில் இருந்து வருகை தரும் வைத்தியருக்காக நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் வேரவில் பிரதேச வைத்தியசாலைக்கு இன்னொரு வைத்தியரை நியமிப்பதற்கு வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பிரதேச பொது அமைப்புகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.(4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவும் மருந்தும் எமனாகலாம்; இது பற்றிய தெளிவு அவசியம்!

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

அலட்சியத்தால், கவலையீனத்தால் நாம் உண்ணும் உணவும் உட்கொள்ளும் மருந்தும் எமது யிரை காவு கொள்ளும் நிலைபற்றி அவசியம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். தற்போது ஆங்காங்கே நடந்தேறும் அனைவரும் தவிர்க்கக்கூடிய இவ்வாறான நிகழ்வுகளை மக்களுக்கு தெரியப்படுத்தும் முயற்சியே இது. அவசியம் இதனைப் பற்றி உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு, நண்பர்களுக்கு, அயலவர்க்கு தெரியப்படுத்துங்கள். உங்களாலும் பலவுயிர்களைக் காப்பாற்ற முடியும்.

எமது முன்னோர்கள் உணவே மருந்து, மருந்தே உணவு என கூறியதன் அடிப்படையில் நாம் உண்ணும் உணவானது அதிலுள்ள ஊட்டச் சத்துகள், விற்றமின்கள் மற்றும் மூலிகைத் தன்மை இவையனைத்தும் கொண்டுள்ளதால் மருந்தாகவும் தொழிற்படுகின்றது. அதே வேளையில் நாம் பயன்படுத்தும் மருந்தும் பாரம்பரிய மருத்துவத்தில் பல வேளைகளில் இயற்கையின் உணவாகவே இருக்கின்றது. மேலைத்தேய மருத்துவத்தில் நோயை குணமாக்கும் இந்த உணவும் மருந்தும் ஒன்றுக்கொன்று ஒத்தியைவதால் அவையிரண்டினாலுமான பயனை நாம் முழுமையாக அனுபவிக்க முடிகின்றது. சுகதேகிகளாகவாழவும் வழி கிடைக்கின்றது.

மாறாக இரசாயன தாக்கத்தில் ஈடுபடக் கூடிய மருந்துகள்,ஒவ்வாத தன்மையுடைய தாயிருந்து அவையிரண்டையும் ஒரே நேரத்தில் உள்ளெடுக்கும் போது ஒன்றுக்கொன்று முரணாக அமைவதால் உடல்நிலைமை பாரதூரமாகி விடும். மேலும் உணவும் மருந்தும் ஒன்றையொன்று ஒவ்வாத தன்மைக்குள் அல்லது மாறாக தமக்குள்ளே இரசாயன தாக்கத்தில் ஈடுபட்டால் எமது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் நிலைக்கு செல்லக்கூடிய நிலைமையும் உண்டு. இந்த வித்தியாசத்தை உணர்ந்து பயன்படுத்தும் மருந்துகளுக்கு சா.முன் மற்றும் சா.பின் என குறித்துத் தருகின்றார்கள். இதனது விளக்கம் சாப்பிடுவதற்கு முன் மற்றும் சாப்பிட்டதற்கு பின் என வாகும். இதனை சிலேடையாக சாவதற்கு முன் மற்றும் சாவுக்குபின் எனவும் விரிக்கலாம் என்றார் நம்மாழ்வார். மருத்துவரின் சரியான ஆலோசனையின் மாயோ (mayoor Mayon naise) அல்லது மயோனெஸிஸ் எனப்படும் பதார்த்தம் தடிப்பான, குளிர்மையான மற்றும் கிறீம் போன்றதொரு சோஸ் (sauce) ஆகும். இதில் 75 சதவீதம் கொழுப்பு, 14 சதவீதம் கொலஸ்திரோல் இன்னும் சோடியம் 635 மில்லி கிராம் இருக்கின்றன. அநேகமான பெரிய வியாபாரக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இதனைப் பாவித்து சான் விச்சுகள், ஹம் பேர்கர்ஸ், சலாட்டு கூட்டு ,பிரெஞ்சு வறுவல்கள், பீசா மற்றும் பர்கர்கள் தயாரிக்கப்படுகின்றன. ஓரளவிற்கு வசதி படைத்தவர்களின் உணவாக இவை இருந்தாலும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் இத்தகைய உணவுகளை விரும்பியுண்ணுவதனையும் அதனை வெளிநாட்டு தகுதிக்குரிய உணவாகவும் அடையாளப்படுத்தி இங்குள்ள மக்களுக்கும் இவ் வுணவுகளை பழக்கிவிட்டு செல்கின்றனர்.

பிரித்தானியாவின் பட்ஜெட் பல பொருள் அங்காடிகடைகளுக்கு Potts Partnership Ltd என்னும் நிறுவனம் விநியோகிக்கும் மயோனேஸில் இல் கிருமிகள் இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளதையடுத்து, அதை அந்த நிறுவனம் திரும்பப் பெற்று வருகிறது. Potts' Truffle Mayonnaise என்னும் 230 கிராம் அளவுள்ள மயோனெஸிஸ் பாக்கெட்களே திரும்பப்பெறப்படுகின்றன. 2024, ஜூலை best before திகதியும் 8823 என்னும் batch code கொண்ட மயோனெஸிஸ் தான் பாதிக்கப்பட்டுள்ளது.

உண்ண உண்ண இன்னும் உண்ணத் தூண்டும் உணவுகளாக இவை இருப்பதற்கு அஜினோமோட்டோ [Aji-no-moto]வைப் போல இந்த மாயோநெய்ஸ்சை உணவில் கலக்கின்றார்கள். அஜினோமோட்டோ என்பது வேதியியலில் MSG எனப்படும்

கின்றது. நோயொன்றுக்கு மாத்திரை அல்லது குளிகை வேலை செய்யத் தொடங்கியவுடன் அவரே உடனடி வைத்தியராக பலருக்கு அறிவுரை கொடுக்க தொடங்கி விடுவார். உடலைப் பரீட்சித்து உள்ள பிரச்சினையை அறியாமல் தேவையற்ற விதத்தில் மருந்துகளை உட்கொள்வது பிரச்சினையை மேலும் அதிகரித்துவிடும். வருமுன் காப்பதும் வந்த பின் முறையான மருத்துவ ஆலோசனையைப் பெற்று அதனை குணப்படுத்த முயல்வதுமே சிறந்தது எனக்கொள்க.

இப்போது வலிமை குறைந்த, சரியாக பரீட்சிக்கப்படாத அதே வர்த்தக நாமத்தில் வேறு பல மருந்துகள் (நாமத்தில் யாரும் அதிகம் கவனிக்காத மாதிரி சிறிய மாற்றத்தை ஏற்படுத்தி) சந்தையில் புழக்கத்தில் வந்திருக்கின்றன என்னும் செய்தி ஒருகணம் நெஞ்சை உலுக்க வைக்கின்றது. நோயாளி

மருந்துகளையும் பயன்படுத்த வேண்டாமே. தொடர்ந்து காய்ச்சல் காயுது என பனடோலை அவ்வப்போதும் தொடர்ச்சியாகவும் பயன்படுத்தி இறுதியில் உயிரை மாய்த்த சோகக் கதையையும் இத்தேசம் பதிவு செய்திருக்கின்றது. அவதானமாக இருத்தலும் தேவையான உணவை உண்பதும் மருத்துவத்தை சரியான வழியில் அணுகுவதும் பிரச்சினைகளை குறைக்க வழி செய்யும்.

இலங்கையிலுள்ள மருத்துவக் கட்டமைப்பு சிறப்பானது. இருக்கின்ற வசதி வாய்ப்புக்களைக் கொண்டு சிறந்த மருத்துவம் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது. அதனால் சுகாதாரத் துறையில் நம்பிக்கை வைத்து அவர்களின் சிபாரிசின் பிரகாரம் எமக்கு வரும் நோய்களை குணப்படுத்த அனைவரும் முயற்சிப்போம்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...

Monosodium Gluta mate ஆகும். மிச்சர்கள் தயாரிப்பதற்கு அநேகமானவர்கள் அஜினோமோட்டவைப் பயன்படுத்துவது வழக்கம். ஏனெனில் அது ஒரு தரம் நாக்கில் சுவைக்கப்பட்டால் மீண்டும் மீண்டும் உண்ணத் தூண்டும் சுவை நரம்புகளை நாக்கில் தட்டி உசுப்பி விடும். இருந்த இருக்கையிலேயே ஒரு கிலோ மிக்சர் பக்கற்றை கிரிக்கெட் மற்றும் கால்பந்து ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டு உள்ளிறக்கும் கனவான்களும் நம்மிடையே இருக்கின்றார்கள். எது எப்படியாயினும் அளவாக இவற்றை அருந்தினால் பிரச்சினை குறைவு. ஆனால் அளவுக்கதிகமானால் அமிர்தமும் நஞ்சுதானே.

இவ்வுணவுப் பொருட்கள் சுகதேகிகளுக்கு எந்த பிரச்சினையையும் உருவாக்குவதில்லை என்னும் பொதுவான கருத்து எம்மவர்களுக்கு எவ்வகையிலும் பொருந்துவதில்லை. ஏதோவொரு பிரச்சினையுடன் காலந்தள்ளும் அளவுக்கு எமது உடலின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ளது. சரியான, தேவையான நித்திரையின்றி, முழுமையான ஊட்டச்சத்தான உணவின்றி நீர் அதிகம் அருந்தாது,அவசர உணவுகளுக்குள் (Fast Food) எமது வாழ்க்கையைத் திணிக்கப் பழகிய பின்பு அதிலிருந்து மீள்வது மிகவும் சிரமமாகவே இருப்பதாக பலர் முனகுவதும் காதுகளில் ஒலிக்கின்றது. அப்படிப்பட்ட சூழலில் இவ்வகையான எமக்கும் எமது சுவாத்தியத்திற்கும் ஒத்துவராத உணவு வகைகளைத் தவிர்த்து எமது பாரம்பரிய உணவுகளை உண்டால் அதிகம் தீங்கு வராமல் எமது உடலை பாதுகாத்துக் கொள்ளலாம்.

உணவுதான் இப்படியென்றால் மருந்து வகைகளிலும் தற்போது பிரச்சினை உருவாகியிருக்கின்றது. ஒன்று நோய் கிருமிகளுக்கெதிராக நாம் உட்கொள்ளும் அன்ரிபயோடிக்ஸ் போன்றன தேவையற்ற விதத்தில் சரியான மருத்துவ ஆலோசனையின்றி உட்கொண்டு விட்டு பின்னர் அவற்றினால் பயனேதுமின்றிப்போகும்போது மருத்துவரை நாடுவதில் எதுவித பயனுமில்லை. நாமாகவே எமதுடலில் நோயெதிர்ப்பு சக்தியிழப்புக்கு காரணமாயிருக்கின்றோம் என்பதனை எவரும் கவனிப்பதில்லை. மேலும் சரியான அறிவின்றி, தகுதியின்றி பலர் மருந்துகளை சிபாரிசு செய்வதனையும் பல இடங்களில் சுட்டிக்காட்டப்படு

யொருவர் மருத்துவ நிலையங்களில் உள்ள மருந்துகளை நம்பிக்கையுடனேயே வாங்கி பயன்படுத்தும் நிலையில் போலி மருந்துகளும் விற்பனைக்கு வருகின்றன என்னும் செய்தியை நம்ப முடியவில்லை. சுகாதாரத்திணைக்களமே 300 இற்கும் மேற்பட்ட மருந்துகளை தடை செய்திருக்கின்றது. அல்லது சந்தையில் கிடைக்காது செய்திருக்கின்றது. இவை எங்கிருந்து வருகின்றன. அவ்வாறு பரீட்சித்துப் பார்க்காமல் எமது சந்தையில் எவ்வாறு விற்பனைக்கு வருகின்றன என்பது எமது சுகாதார கட்டமைப்பை கேள்விக்குள்ளாக்கும் நிலையாகும். அதிலும் இங்கு வந்த பொருட்கள் விற்பனையாகாது தேங்கினால் வேறு வழிகளில் விற்பனையாகி விடும். பயன்படுத்தும் காலந் தவிர்ந்த பல உணவுப் பொருட்கள், மருந்துகள் எம்மையறியாமலேயே அவற்றின் லேபல்களை மாற்றி மறைத்து விற்பனையாவதனை கடந்த காலங்களில் கண்டிருக்கின்றோம். அவ்வாறு விற்கப்படும் மருந்துகளின் சக்தி வெகுவாக குறைந்திருப்பதோடு அதன் பக்க விளைவுகளும் அதிகமாக இருக்கும் என்பதே உண்மை.

கண்ணுக்கு விடும் சொட்டு மருந்திலிருந்து பலருக்கு ஒவ்வாமை தன்மை உருவாகியிருந்ததும் அதனால் பன் வெளிநாடுகளில் நோய் வாய்ப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு வகை கண் மருந்து அல்லது கண் சொட்டு மருந்தில் காணப்பட்ட மருந்துகளுக்கு எதிர்ப்புடைய ஒரு வகை பக்றீரியாவான சூடோமோனசு ஒருஜினோசா (Pseudomonas auriginosa) வினால்அதனைப் பயன்படுத்தியவர்களுக்கு பார்வையிழப்பு ஏற்படவும் கண்ணை முழுமையாக அறுவை சிகிச்சை மூலம் அகற்றவும் செய்திருக்கின்றது. இது விடயத்தில் நாம் மிகவும் கவனமாக இருத்தல் அவசியமாகின்றது. கண் மருத்துவரின் சிபாரிசின்றி எந்த மருந்துகளையும் வர்த்தக நாமங்களையும் வேறு யாரினதும் சிபாரிசுகளை கேட்டு பயன்படுத்த வேண்டாம். அங்கே நிகழ்ந்ததைப் போன்று நம்மவர்களும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டாமே.

தேவையின்றி, அவசியமின்றி ஒரு வேளைக்கான உணவை திணிக்க வேண்டாமே அதே போல

இந்தக் குறிப்பிட்ட விபரங்கள் கொண்ட மயோனேஸை வாங்கியவர்கள், அதை உண்ண வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் அதை அருகிலுள்ள Lidl கடையில் கொடுத்து அதற்காக செலுத்திய பணத்தை முழு மையாக திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**என்ன பாதிப்பு?**

இந்த மயோனேஸ், Listeria monocytogenes என்னும் கிருமியால் பாதிக்கப்பட்டுள்ளது.

அதிக காய்ச்சல், உடல்வலி, உடல் நடுக்கம், வாந்திவருவது போன்ற உணர்வு மற்றும் வயிற்றுப் போக்கு ஆகியவை Listeria பாதிப்பின் அறிகுறிகள் ஆகும்.

### லண்டனில் புரோட்டீன் பானத்தால் பரிதாபமாக பறி போன சிறுவனின் உயிர்



மேற்கு லண்டனில் தந்தை வாங்கி வந்த புரோட்டீன் பானத்தால் 16 வயது இளைஞர் பரிதாபமாக பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**சிகிச்சை பலனின்றி மரணம்**

ஈலிங் பகுதியில் பெற்றோருடன் வசித்து வந்த 16 வயது ரோஹன் கோதானியா என்பவரே மோசமாக பாதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தவர்.

ஆனால் அவரது மரணத்திற்கான காரணம் அப்போது தெரிய வராத நிலையில் அவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டது. கடந்த 2020 ஒகஸ்ட் மாதம், தமது மகனின் உடல் வலிமையை அதிகரிக்கும் பொருட்டு, ரோஹனின் தந்தை புஷ்பா கோதானியா பல்பொருள் அங்காடி ஒன்றில் இருந்து புரோட்டீன் பானம் ஒன்றை வாங்கி வந்துள்ளார்.

குறித்த பானம் பருகிய ரோஹனுக்கு அரிய மரபணு தொடர்பான நோயைத் தூண்டி விட்டுள்ளது. இதனையடுத்து மூளையில் பாதிப்பு ஏற்பட, மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்ட மூன்றாவது நாள் ரோஹன் மரணமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

புரோட்டீன் பானம் பருகிய அன்று மதியமே அதன் தாக்கம் தமது மகனை செயலிழக்க வைத்துள்ளதாகவும் அடுத்த நாளில் ஆபத்தான கட்டத்திற்கு கொண்டு சென்றதாகவும் புஷ்பா தெரிவித்துள்ளார்.

**உடல்நலன் கருதியே புரோட்டீன் பானம்**

இதனிடையே ரோஹன் மரணமடைந்ததை அடுத்து அவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டுள்ளது. உறுப்பு தானம் பெற்றவர் சுமார் 13 மாதங்களுக்கு பின்னர் திடீரென்று வலிப்பு நோயுடன் மருத்துவமனையை நாடியுள்ளார்.

இந்தநிலையில், தமது மகனின் உடல் நலன் கருதியே புரோட்டீன் பானம் வாங்கி வந்துள்ளதை புஷ்பா நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.


மேலும், புரோட்டீன் பானங்கள் இனி எச்சரிக்கை குறிப்புடன் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் மருத்துவர்கள் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

புஷ்பாகோ தானியா குடும்பம் இந்தியாவின் குஜராத் மாகாணத்தை சேர்ந்தவர் என கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2023 - 17.09.2023



வருபவரை வரவேற்பதில் வல்ல வர்களாக விளங்கும் தனுசு இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியைப் பார்க்கிறார். ஆயினும் அவர் வக்கிரம் பெறும் மாதம் இது. அதே நேரத்தில் சனி வக்கிர இயக்கத்தில் பின்னோக்கி வந்து, ஏழரைச் சனியில் பாதச் சனியாக செயற்படப் போகிறார். எனவே பகைக்கு மத்தியில் வாழ்க்கையும் போட்டிக்கு மத்தியில் முன்னேற்றமும் ஏற்படப் போகிறது.

**கடக - சுக்கிரன்**

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6 ஆம் இடத்திற்கு வரும்போது "விபரீத ராஜ யோக" அடிப்படையில் எதிர்பாராத விதத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். பூமி யோகம் முதல் புதிய வாகனம் வாங்கும் யோகம் வரை நடைபெறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வருவீர்கள். பகையான உறவினர்கள் உறவாகி பாசம் காட்டுவர். உத்தியோகத்தில் திடீர் முன்னேற்றமும் சம்பள உயர்வும் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி - செவ்வாய்**

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம - விரயாதிபதியான செவ்வாய், 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பிள்ளைகள் வழியில் சில நல்ல தகவல்கள் கிடைக்கும். குறிப்பாக படித்து முடித்து வேலை இல்லாமல் இருக்கும் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு, புதிய சொத்துகள் வாங்கும் யோகம் ஒருசிலருக்கு உண்டு. பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

**மகர - சனி**

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்திற்கு வரும் சனி, குடும்பச் சனியாக சஞ்சரிக்கப் போகிறார். எனவே குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வந்து சேரும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக நடை




பெறாத ஒரு சில காரியங்கள் இப்பொழுது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். சனி வழிபாடு நன்மைகளை வழங்கும்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

சிம்மத்தில் சஞ்சரிக்கும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் புதன். அவர் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரித்து வக்கிர நிவர்த்தி பெறுகிறார். எனவே தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள், பொருளாதார விருத்திக்கு அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு, பணியாளர்களின் தொல்லை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்புகளும் அதனால் பிரச்சினைகளும் உருவாகும். கலைஞர்கள், சக கலைஞர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. மாணவ-மாணவிகளுக்கு கவனச் சிதறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பெண்களுக்கு மன வருத்தம் அதிகரிக்கும். மகிழ்ச்சி குறையாமல் இருக்க தெய்வ வழிபாடுகள் கைகொடுக்கும். பணிபுரியும் பெண்களுக்கு அருகில் இருப்பவர்களால் பிரச்சினை ஏற்படலாம்.

## ஆடை, ஆபரணச் சேர்க்கையுண்டு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்க விரும்பும் மகர இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். சில நாட்களுக்குப் பிறகு உங்கள் இராசிக்கு வரப்போகிறார். அஷ்டமத்தில் ஐந்து கிரகங்கள் இருக்கின்றன. எனவே மிக மிக கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரம் இது. உடல் ஆரோக்கியம், உள்ளத்தில் அமைதி, இல்லத்தில் பொருளாதார நிலை குறையும். கடன்சுமை மட்டும் அதிகரிக்கும். எந்தக் காரியத்தையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை செய்தால் திருப்தியான வாழ்க்கை அமையும்.

**கடக - சுக்கிரன்**


ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சப்தம ஸ்தானத்தில் வரும்போது பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். அவர்களின் கல்யாண முயற்சி கைகூடும். "தொழில் நிலையத்தை மாற்றி அமைக்கலாமா? அல்லது தொழில் நிலையத்தை வீட்டிலேயே வைத்து நடத்தலாமா?" என்று சிந்திப்பீர்கள்.

**கன்னி - செவ்வாய்**

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பாக்கிய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது எதிர்பார்த்தவை எளிதில் நடைபெறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும். பெற்றோர் வழியில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். உத்தியோகத்தில் உங்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்த அதிகாரிகள் விலகுவர். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**மகர - சனி**

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். ஜென்மச் சனியாக இப்பொழுது வருவதால் மனநிம்மதி குறையும். உடல்நலக் குறைவு




உருவாகும். உற்சாகமிழந்து காணப்படுவீர்கள். நண்பர்கள் திடீரென விலக நேரிடலாம். தொழிலில் பணியாளர்கள் பிரச்சினை தலைதூக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் தொல்லை உண்டு. உங்கள் முன்னேற்றத்தைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சனம் செய்ய வேண்டாம். இக்காலத்தில் முறையான வழிபாடுகள் உங்களுக்குத் தேவை.

**புதன் வக்கிர நிவர்த்தி**

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் அஷ்டமத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். "மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் உண்டு". எனவே தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டே இருக்கும். திடீர், திடீரென புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். சேமிப்பு உயரும். உத்தியோகத்தில் இடமாற்றம், ஊர் மாற்றம் விரும்பத்தக்க விதத்தில் வந்து சேரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். தொழில் செய்பவர்களுக்கு, பங்குதாரர்களால் தொல்லைகள் வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்காது. கலைஞர்களுக்கு சக கலைஞர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். மாணவ - மாணவிகளுக்கு மறதி அதிகரிக்கும். பயிற்சி வகுப்புகளில் பங்கு கொள்வது நல்லது. பெண்களுக்கு குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தட்டுப்பாடுகள் அகல, புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள்.

## வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு!

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 263





"அம்மா கொஞ்சம் காத்திருக்கிறாயா? நானும் இதோ சந்நிதியைப் பூட்டிக்கொண்டு வீட்டுக்கு வருகிறேன்!" என்றார். இருட்டிய பிறகு அந்தக் காட்டு வழியில் செல்வது கொஞ்சம் சிரமமான காரியந்தான். ஆனால் வழிகாட்டுவதற்குப் பூங்குழலி இருந்தால் கவலையே கிடையாது.

"இருக்கிறேன், ஐயா! எனக்கு அவசரம் ஒன்றுமில்லை. மெதுவாகக் கோயில் கைங்கரியங்களை முடித்துக் கொண்டு புறப்படுங்கள்!" என்று பூங்குழலி கூறிவிட்டுக் கோயில் பிரகாரத்துக்கு வந்தாள். மரக்கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு பிரகாரத்தின் மதில் சுவரின் மேல் தாவி ஏறினாள். மதில் மூலையில் நந்தி பகவானுடைய பெரிய சிலை ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. அந்தச் சிலை மீது சிறிது சாய்ந்த வண்ணம் மதில் மீது காலை நீட்டிப் படுத்தாள். தேங்காய் மூடியைப் பல்லினால் சுரண்டிச் சாப்பிடத் தொடங்கினாள்.

நாலாபுறமும் இருள் சூழ்ந்து வரும் விசித்திரத்தைப் பூங்குழலி பார்த்துக் கொண்டேயிருக்கையில், குதிரையின் காலடிச் சத்தத்தைக் கேட்டாள். சத்தம் வந்த வழியே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். குதிரைக் காலடியின் சத்தம் அவளுடைய உள்ளத்தில் ஏதேதோ பழைய ஞாபகங்களை எழுப்பி அவளைக் கனவு லோகத்துக்குக் கொண்டு போயிற்று. எங்கிருந்தோ இனந் தெரியாத ஒரு துக்கம் வந்து நெஞ்சை அடைத்தது. வருகிறது யாராயிருக்கக்கூடும்? யாராயிருந்தால் நமக்கு என்ன கவலை? கொஞ்சக் காலமாகப் புது ஆட்கள் வருகிறதும் போகிறதும் அதிகமாய்த் தானிருக்கிறது. இராஜாங்க காரியமாக வருகிறார்களாம் போகிறார்களாம். நேற்றைக்குக் கூட இரண்டு பேர் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்கே அருவருப்பாயிருந்தது. அண்ணனைப் படகு வலிக்கச் சொல்லி ஈழத்துக்குச் சென்றார்கள். பணமும் நிறையக் கொடுத்தார்கள். அவர்களுடைய பணத்திலே இடி விழட்டும்! 'யாருக்குப் பணம் வேண்டும்! பணத்தை வைத்துக் கொண்டு இந்த நடுக் காட்டில் என்ன செய்வது? ஆனால் அண்ணனுக்கும் அண்ணிக்கும் பணம் என்றால் ஒரே ஆசை. எதற்கோ தெரியவில்லை! சேர்த்துச் சேர்த்துப் புதைத்து வைக்கிறார்கள்.

குதிரைக்காலடிச் சத்தம் இதோ அருகில் நெருங்கி வருகிறது. ஒரு குதிரை அல்ல இரண்டு குதிரைகள் வருவதுபோலத் தோன்றுகிறது. இதோ அவை தென்படுகின்றன. பள்ளத்திலிருந்து மெள்ள மெள்ள மேட்டில் ஏறி வருகின்றன. நெடுந்தூரம் பிரயாணம் செய்து களைத்துப் போன குதிரைகள். ஒவ்வொரு குதிரை மீதும் ஒரு ஆள் வருகிறான். முதலில் வருகிற குதிரை மேல் வருகிறவன் வாலிபப் பிராயத்தவன். பார்க்க இலட்சணமாக இருக்கிறான் வாட்டச்சாட்டமாகவும் இருக்கிறான் முகத்தில் கம்பீரம் இருக்கிறது. ஆனால் அவளுடைய இருதய அந்தரங்கத்தில் குடிகொண்டிருக்கும் அந்த இன்னொரு முகத்தின் அழகும், கம்பீரமும் எங்கே? இவனுடைய முகம் எங்கே? பார்க்கப் போனால் இவனுடைய முகம் மரப்பொந்தில் இருக்கும் ஆந்தை முகம் மாதிரியல்லவா சப்பட்டையாயிருக்கிறது?

குதிரைமேல் வந்த இருவரில் முதலில் வந்தவன் நமது பழைய நண்பனாகிய வல்லவரையன் வந்தியத்தேவன்தான். பின்னால் வந்தவன் வைத்தியருடைய மகன். இருவரும் பழையாறையிலிருந்து இங்கே வந்து சேர்வதற்குள் இளைத்துக் களைத்துச் சோர்வுற்றுப் போயிருக்கிறார்கள். ஆயினும் வந்தியத்தேவனுடைய முகம், கோயில் மதில் மேல் காலை நீட்டிச் சாய்ந்து கொண்டிருந்த பூங்குழலியைக் கண்டதும் சிறிது மலர்ந்தது. அவள் தன்னுடைய முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்ததும் அவனுக்கு இயற்கையான உற்சாகமே பிறந்து விட்டது. அவனும் குதிரையே நிறுத்தி விட்டு அவளுடைய முகத்தை ஆர்வத்துடன் உற்றுப் பார்க்கலானான். தன் முகத்தை மரப்பொந்திலுள்ள ஆந்தையின் முகத்தோடு அவள் ஒப்பிடுகிறாள் என்று மட்டும் அவன் அறிந்திருந்தால் அவ்வளவு உற்சாகப்பட்டிருக்க முடியாது தான். ஒரு மனத்திலுள்ளதை இன்னொருவர் முழுதும் அறிய முடியாமலிருப்பது எவ்வளவு அனுகூலமாயிருக்கிறது?

குதிரைமேல் வந்தவன் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை பூங்குழலி அறிந்தாள். கையில் தான் தேங்காய் மூடிவைத்துக்கொண்டு பல்லினால் சுரண்டித் தின்று கொண்டிருப்பதையும் நினைத்தாள். உடனே எங்கிருந்தோ ஒரு நாண உணர்ச்சி வந்து அவளைப் பற்றிக் கொண்டது. பிரகாரமதில் சுவரிலிருந்து வெளியே வெண் மணலில் குதித்தாள். மதில்சுவர் ஓரமாக ஓடத் தொடங்கினாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி..)

## சாகாத வரம்



பேராசை பிடித்த ரத்தினமும், வைரமும் தங்கள் இருவரையும் அடித்து அந்த குளத்தில் வீசி எறியும்படி ஏற்பாடு செய்தனர்.

அடுத்த நாள் அவர்கள் இருவரும் கோவிலின் எதிரில் தூங்கியபடி கிடந்தனர்.

தூங்கி எழுந்தனர். அவர்கள் எதிரில் கடவுள் தோன்றினார்.

"உங்களுக்கு என்ன நடந்தது"? என்றார் கடவுள்.

தங்களை விரோதிகள் அடித்துப் போட்டதாக கூறினர்.

"கடவுளே நான் 1000 ஆண்டு சாகாமல் வாழவேண்டும்" என்றான் ரத்தினம்.

"நான் 2000 ஆண்டு சாகாமல் வாழ வேண்டும்" என்றான் வைரம்.

ரத்தினம் 3000 ஆண்டு என்றான். வைரம் 4000 என்றான். இப்படி ஆண்டுகளை ஏற்றிக் கொண்டே போனார்கள்.

கடவுளுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"நான் சொல்வது போல் செய்தால் உங்கள் திறமைக்குத் தகுந்தவாறு பத்தாயிரம் ஆண்டுகள் கூட சாகாமல் வாழலாம்.." என்றார் கடவுள்.

"சொல்லுங்கள் சொல்லுங்கள்" என்றனர் இருவரும் அவசரம் அவசரமாக.

"கோயிலில் எதிரில் இருக்கும் இந்த குளத்தில் நீங்கள் மூழ்கி இருக்கும் ஒவ்வொரு மணித்துளிக்கும் 100 ஆண்டுகள் சாகாமல் வாழும் வரம் கிடைக்கும்" என்று கடவுள் சொல்லி முடிப்பதற்குள் இருவரும் குளத்தில் குதித்தனர்.

இருவரும் நீருக்குள் மூழ்கினர். ரத்தினத்தை விட 100 ஆண்டாவது அதிகம் பெற வேண்டும் என்று வைரம் நினைத்தான்.

வைரத்தைவிட 100 ஆண்டு அதிகமாகப் பெற வேண்டும் என்று நினைத்தான் ரத்தினம்.

யார் அதிக ஆண்டு சாகாமல் இருக்கும் வரத்தைப் பெறப் போகிறார் என்று பார்த்தபடி கடவுள் நின்று கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் வைரமும், ரத்தினமும் பிணமாக குளத்தில் மிதந்தனர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமர்கள் வெல்ல வேண்டுமாயின் அனுமர்கள் மட்டுமல்ல; விபூடணர்களும் தேவை

இராம பிரான் இராவணனை வதம் செய்து சீதையை மீட்டெடுத்த அத்தியாயத்தை கம்பன் யுத்த காண்டம் என வகுத்தான்.

இராமாயணத்தை ஆறு காண்டங்களாக வகுத்த கம்பன் யுத்த காண்டத்தில் பாட்டுடைத் தலைவனாகிய இராமனுக்கு வெற்றி வாகை சூடுகின்றான்.

ஆம், இராமபிரானின் வெற்றி என்பது தனித்து அவனின் தோள்புயத்தினால் ஏற்பட்டதன்று.

மாறாக, இராமனின் வில்லும் வானர சேனைகளின் படை பலமும் அவனின் வெற்றிக்கு உறுதுணையாயின.

இருந்தும் இராம – இராவண யுத்தம் என்பது தனித்து இராவணேஸ்வரனை வதம் செய்வது மட்டுமல்ல,

மாறாக அசோகவனத்துச் சிறையில் இருக்கின்ற சீதையை மீட்டெடுப்பதுதான் யுத்தத்தின் உச்சக்கட்ட இலக்கு.

ஆக, இங்குதான் இராமபிரானின் வில் பலத்தையும் வானரசேனைகளின் படை பலத்தையும் கடந்து, எதிர்த்தரப்புத் துணை தேவைப்படுகின்றது.

இங்குதான் இராமபிரானின் இராஜதந்திரம் புலப்படுகிறது.

ஆம், இராவணனின் தம்பி விபூடணன் இராமருடன் இணைகின்றான். விபூடணன் இராமர் தரப்புடன் இணைய வருகின்ற வேளை அவன் தொடர்பில் இராமர் கிஞ்சித்தும் சந்தேகம் கொண்டாரில்லை.

காரணம் தன்னிடம் வருகின்ற விபூடணனிடம் தன் நாட்டை – தன் இனத்தைக் காப்பாற்றுகின்ற வேட்கை இருந்ததை இராமர் உணர்ந்திருந்தார்.

தன்னால் போர்க்களத்தில் பலமிழந்து நிற்கின்ற இராவணனை கைவிட்டுத் தன்னிடம் வருகின்ற விபூடணன் தன் அணியில் மட்டும் நேர்மையாக இருப்பானா என்று இராமபிரான் சந்தேகித்திருந்தால் இராவணனுக்கு முன்னதாக விபூடணனின் உயிரை இராமசேனை பறித்திருக்கும். ஆனால் அது நடக்கவில்லை.

இங்குதான் விபூடணனின் நோக்கமும் போர்க்களத்தில் இராமருக்கு வேண்டிய எதிர்த்தரப்பு உதவியும் ஒன்று சேர்கின்றன.

இந்த இணைவு படைப் பலத்தால், யுத்தப் பயிற்சியால், சேனைகளின் அளவால் ஏற்படுவதில்லை. அது சூழ்நிலை சார்ந்த மதியூகத்தால் அமையப் பெறுவது.

அந்த மதியூகம் இராமரிடம் இருந்தது. கூடவே இராவணன் தரப்பில் கும்பகர்ணனிடம் இருந்தது.

ஆம், விபூடணா? நீ போய் இராமருடன் சேர்ந்து இந்த நாட்டையும் எங்கள் குலத்தையும் காப்பாற்று என்று கூறியவன் கும்பகர்ணன்.

போருக்கு நின்றிடும் போதும் நிதானம் தவறாமல் தீர்மானம் எடுத்தவன் கும்பகர்ணன்.

தன் அண்ணன் இராவணனுக்காகப் போர்க்களத்தில் நின்ற கும்பகர்ணன் தன்னுயிரை விடுத்தேனும் இராவணனைக் காப்பாற்ற வேண்டுமென்ற உயர்ந்த பற்றுதலைக் கொண்டிருந்தவன்.

அண்ணா! நான் போர்க்களத்தில் இறந்துவிட்டேன் என்ற செய்தியறிந்தேனும் கற்புடைத் தேவி சீதையை விட்டு விடு எனக் கெஞ்சுகின்ற அவனின் எண்ணமெல்லாம் தன் அண்ணன் இராவணன் வாழ வேண்டும் இலங்கையை ஆள வேண்டும் என்பதுதான்.

ஆயினும் தன் எண்ணம் சாத்தியப்படாது என்றபோது, விபூடணனை இராமர் பக்கம் அனுப்பியதும் அவனே. விபூடணனின் வரவை தன்னலம் கருதி இராமரும் ஏற்றார்.

ஆக, இராமர்கள் வெல்ல வேண்டுமாயின் அனுமர்கள் மட்டுமல்ல அதற்கு விபூடணர்களும் தேவை.

ஆம், நாம் உரிமையை வென்றெடுக்க வேண்டுமாயின், எதிர்த்தரப்பில் எமக்குத் துணை நிற்க வல்லவர்களை நாம் எமக்குத் துணையாக்க வேண்டும். இதனையே இராமாயணம் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

# பெரமுனவுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி பிளவுபடுத்த பலர் சதித் திட்டம்

## பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி கட்சியை பிளவுபடுத்த பலர் சதித்திட்டம் தீட்டுவதாக கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும், எந்தச் சதியாலும் மொட்டுக் கட்சியைப் பிளவுபடுத்த முடியாது என்பதை வெளிப்படையாகக் கூற விரும்புவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மொட்டுக் கட்சியை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் சிலர் செயற்படுவதாக பசில் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறித்த தரப்பினரை தற்போது அடையாளம்கண்டுள்ளதாகவும் அவர்களுக்கான தண்டனையை எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் வழங்குவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தல் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல்களையும் எதிர்கொள்ள தமது கட்சி தயாராகவுள்ளதாக பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேர்தல்களில் தரமான வேட்பாளர்கள் களமிறங்குவார்கள் எனவும் மொட்டுக் கட்சி எந்தவொரு தேர்தலிலும் தோற்காது எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

காலி சிறைச்சாலையிலிருந்து

## கைதிகளை வெளியே அழைத்துச் செல்ல தடை

காலி சிறைச்சாலையில் இருந்து கைதிகளை வெளியே அழைத்துச் செல்ல இரண்டு வாரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளிடையே பரவும் காய்ச்சல், தோல் தொற்றுநோய் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையில், சிறைக்கைதிகளை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் செயற்பாடுகள் இரண்டு வாரங்களுக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

காலி சிறைச்சாலையில் இரண்டு சிறைக் கைதிகள் உயிரிழந்தமை ,சிறைச்சாலையில் இந்நாட்களில் பரவிவரும் நோய் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட வைத்தியர்கள் குழாமொன்று சிறைச்சாலைக்கு நேற்று சென்றிருந்தது.

தோலில் தொற்று நோய் உருவாகி இதுவரையில் 9 சிறைக்கைதிகள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், கடந்த 13 மற்றும் 20 ஆம் திகதிகளில் கைதிகள் இருவர் உயிரிழந்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டார். (ம-7)

## அவசியமான வாகனங்களை இறக்குமதி செய்யத் தீர்மானம்

அவசியமான சில வாகனங்களை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.வாகன இறக்குமதியாளர்களுடனான கலந்துரையாடலின்போதே இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்காவின் கடன் கடிதங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் வழங்குவது தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தயாராக இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் கடன் கடிதங்கள் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படவில்லை என இதன்போது வாகன இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்கம் அண்மைக்காலமாக சில வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ள போதிலும், வாகனங்களை இறக்குமதி செய்யும் முயற்சியில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் வாகன இறக்குமதியாளர்களுக்கு இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சுற்றுலாத்துறையை கட்டியெழுப்ப சிறந்த வேலைத்திட்டம் அவசியம்

## தேசிய மக்கள் சக்தி

(கொழும்பு)

சுற்றுலாத்துறையை கட்டியெழுப்ப அரசாங்கமும் மத்திய வங்கியும் இணைந்து சிறந்த வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தேசிய சுற்றுலாக் கொள்கை இல்லை எனவும், அரசாங்கம் இன்னும் அதனை உருவாக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்ததற்கு நாட்டை ஆட்சி செய்பவர்களே காரணம் என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

## மஹாகும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி -வரணி மாசேரி புராதன குரு நாதர் கோவிலின் வசந்த மண்டப மகாகும்பாபிஷேக பெருவிழா இன்று புதன் கிழமை காலை 6.09 தொடக்கம் 7.31 வரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது. (நி-6-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ்.பிரதேசத்தில்** சீனோர்- படகுத் துறை-காரைநகர், கடற்படை தளம்-காரைநகர்,காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி- காரைநகர், தோப்புக்காடு, ஊரி கல்வயல் துர்க்கை அம்மன் கோவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** வலைத்தோட்டம், பெரியதம்பனை,மகாறம்பைக்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கிளிநொச்சியில் விபத்து மூவர் படுகாயம்

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்

கிளிநொச்சி நகர் ஏ9 வீதி காக்கா கடைச் சந்தி பகுதியில் குறித்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பேர் படு காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

13

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### நுகர்வோர் விலைச்சுட்டெண்

குறிப்பிட்ட ஒரு ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு குறித்த ஒரு நாட்டில் உள்ள மக்கள் அனைவராலும் பொதுவாக நுகரப் படுகின்ற பொருட்கள் சேவைகளின் சராசரி விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் குறிகாட்டி விலைச் சுட்டெண் எனலாம். அதாவது விலைச் சுட்டெண் என்பது நடப்பு ஆண்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவுக்கும் அடிப் படை ஆண்டில் அப் பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவுக்கும் உள்ள வீதமாகும்.

உதாரணம் அடிப்படை ஆண் டில் சந்தைக் கூடையின் விலை =25,000 ரூபா. அடிப்படை ஆண்டை தொடர்ந்து வரும் ஏதா வது ஒரு ஆண்டில் ஏதாவது ஒரு மாதத்தில் அச்சந்தைக் கூடையின் விலை= 26,000 ரூபா என்போம். அதன்படி அம் மாதத்திற்கான நுகர்வோர் விலைச் சுட்டெண் = (26,000X 100) /25,000 = 104.0 ஆகும்.

இதை கணிப்பதற்கு பின்வரு வன கவனத்தில் கொள்ளப்படும். 1.அடிப்படை ஆண்டைத் தெரிவு செய்தல் 2. பண்டத் தொகுதி யைத் தெரிவுசெய்தல் 3. பணடங்களின் முக்கியத்துவத்திற்கேற்ப நிறையளிக்கப்படல் 4. ஆய்வுப் பிரதேசத்தினைத் தெரிவுசெய்தல். 5. தெரிவுசெய்த பண்டங்களின் விலைகளைத் தெரிவு செய்தல் என்பனவாகும்.

நுகர்வோன் விலைச்சுட்டெ ண்ணைத் தயார் செய்வதற்கு சமன்பாடு ஒன்று பயன்படுத்தப் படுகின்றது. பொதுவிலை மட்ட த்தை கணிப்பீடு செய்ய வெவ் வேறு விலைச் சுட்டெண்கள் பயன் படுகின்றன.

### இலங்கையில் கணிப்பிடப்படும் விலைச்சுட்டெண்கள்

(1) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI),

(2) தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI),

(3) உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (PPI),

(4) தேசிய உற்பத்திச் சுருக்கி என்பனவாகும்.


இவற்றைக் கணிப்பிடுவது குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் ஆகும். முன்னர் இருந்த மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணுக்கு பதிலாக உற்பத் தியாளர் விலைச்சுட்டெண் அறிமு கப்படுத்தப்பட்டுள்ளது.

### பணவீக்கவீதம்

இரண்டு காலப்பகுதிகளுக்கிடை யில் நுகர்வோர் விலைச்சுட்டெண் களில் ஏற்பட்ட அதிகரிப்பின் நூற்று வீதம் பணவீக்கவீதம் எனப்ப டும்.

### நுகர்வோர் விலைச் சுட்டெண் (1960-2020) - (அடிப்படை ஆண்டு 2010=100)

இலங்கையில் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (அடிப்படை ஆண்டு 2010 = 100) மதிப்பு 2020 இன்





படி 165.10 ஆக இருந்தது. கீழே உள்ள வரைபடம் காட்டுவது போல, கடந்த 60 ஆண்டுகளில் இந்த காட்டி 2020 இல் 165.10 ஆக அதிகபட்ச மதிப்பையும் 1960 இல் 1.49 ஆக குறைந்தபட்ச மதிப்பையும் எட்டியது. (உரு-1,2 ஐப் பார்க்க)

சென்ற ஆண்டுவரையில் அடி படை ஆண்டாக 2013ம் ஆண்டு எடுக்கப்பட்டது (2013=100). அதன்

**இலங்கை - நுகர்வோர் விலைச் சுட்டெண் (2010 = 100)**
**1960-2020 உரு-1**

| ஆண்டு | பெறுமானம் | ஆண்டு | பெறுமானம் | ஆண்டு | பெறுமானம் | ஆண்டு | பெறுமானம் | ஆண்டு | பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1960 | 1.49 | 1973 | 2.38 | 1986 | 8.7 | 1999 | 34.36 | 2012 | 114.77 |
| 1961 | 1.50 | 1974 | 2.67 | 1987 | 9.38 | 2000 | 36.48 | 2013 | 122.69 |
| 1962 | 1.53 | 1975 | 2.84 | 1988 | 10.69 | 2001 | 41.65 | 2014 | 126.60 |
| 1963 | 1.56 | 1976 | 2.88 | 1989 | 11.92 | 2002 | 45.62 | 2015 | 131.37 |
| 1964 | 1.61 | 1977 | 2.92 | 1990 | 14.49 | 2003 | 48.5 | 2016 | 136.57 |
| 1965 | 1.62 | 1978 | 3.27 | 1991 | 16.25 | 2004 | 52.18 | 2017 | 147.09 |
| 1966 | 1.61 | 1979 | 3.62 | 1992 | 18.1 | 2005 | 58.25 | 2018 | 150.23 |
| 1967 | 1.65 | 1980 | 4.57 | 1993 | 20.23 | 2006 | 64.09 | 2019 | 155.53 |
| 1968 | 1.74 | 1981 | 5.39 | 1994 | 21.94 | 2007 | 74.24 | 2020 | 165.10 |
| 1969 | 1.87 | 1982 | 5.98 | 1995 | 23.62 | 2008 | 90.99 | | |
| 1970 | 1.98 | 1983 | 6.81 | 1996 | 27.39 | 2009 | 94.15 | | |
| 1971 | 2.04 | 1984 | 7.94 | 1997 | 30.01 | 2010 | 100 | | |
| 1972 | 2.17 | 1985 | 8.06 | 1998 | 32.82 | 2011 | 106.72 | | |

பிரகாரம் கடந்த 10 வருட நுகர் வோர் விலைச் சுட்டெண்ணின் பெறுமானம் உரு-3இல் தரப்பட்





டுள்ளது. கடந்த மே மாதம் இலங் கையில் நுகர்வோர் விலைச் சுட்டெண் 195.20 ஆகவும் யூன் மாதம் 220.20 ஆகவும் இருந் தது.

### பணவீக்கம் என்றால் என்ன?

பணவீக்கம் என்பது ஒரு குறிப் பிட்ட காலகட்டத்தில் பொருளா தாரத்தின் சரக்கு மற்றும் சேவை பொருட்களின் மீது ஏற்படும் விலை உயர்வு ஆகும். பணவீக்கத்தால் நாணயத்தின் வாங்கும் திறன் குறையும். பணவீக்கம் மெதுவான அல்லது தேக்கமான பொருளா தாரத்திற்கு வழிவகுக்கும்.

ஒரு நாட்டினுடைய பொது விலை மட்டத்தில் ஏற்படுகின்ற சிறிய அளவிலான அதிகரிப்பு பணவீக் கமாக கொள்ளப்படுவதில்லை. இதேபோல் பொதுவிலை மட்டத் தில் ஏற்படுகின்ற தற்காலிக திடீர் அதிகரிப்புகளும் பணவீக்கமாக

பணவீக்கம்







கொள்ளப்படுவதில்லை.

சராசரி விலைமட்டம் தொடர்ச் சியாகவும், பெருமளவாலும் அதிக ரித்துச் செல்லுவதை பணவீக்கம் என்கிறோம். மேலும் வருடாந்த பணவீக்கத்தின் அளவானது ஒவ் வொரு பண்டத்தின் (சரக்கின்) விலையிலேற்படும் மாற்றத்தினால் அல்லாமல் எல்லா பொருட்கள், சேவைகளின் சராசரி விலைகளில் ஏற்படும் மாற்றத்தின் அடிப்ப டையில் கணிக்கப்படுகின்றது.

### பணவீக்க வீதம்

விலை வீக்கத்தின் முக்கிய அளவீடு பணவீக்க வீதம் ஆகும். பணவீக்க வீதம் என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவில் பொது விலைப்பட்டியலில் அதாவது வழக்க மாக நுகர்வோர் விலைப்பட்டியலில் ஏற்படும் சதவீத மாற்றத்தின் ஓராண்டுக்கான மதிப்பாகும்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரசாலையில்...

உள்ள வேப்பமரத்தில் தூக்கிட்ட நிலையிலேயே சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## மாரடைப்பாலேயே...

தவறான செய்தி வெளியாகியிருந்தது.

அச்செய்தியால் அவரின் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக வருந்துகின்றோம். (ம)

## 5 நாள் காய்ச்சல்...

18ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் மறுநாள் நயினாதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி சிசு உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60,104)

## குருந்தூர்...

உறுப்பினர் சரத் வீரசேகர நேற்று பாராளுமன்றில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

குருந்தூர் விகாரைக்கு சென்ற விகாராதிபதியை, அரசியல்வாதிகளுடன் வருகை தந்திருந்த சிலர் தகாத வார்த்தைகளால் பேசி, அங்கிருந்து வெளியேற்றியமையானது பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் செயல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளால் இனங்களுக்கிடையில் மோதல் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது என்றும் அப்படி நேர்ந்தால், அந்த கும்பலும் அவர்களை அங்கு அழைத்து வந்த அரசியல்வாதிகளும் முல்லைத்தீவு நீதிபதியுமே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் அவருக்கு உரிய சிகிச்சைகளை வழங்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சும் நீதி சேவைகள் ஆணைக்குழுவும் இதுதொடர்பாக கவனம் செலுத்தி, அவரை அங்கிருந்து இடம்மாற்றி வேறு ஒருவரை நீதிபதியாக நியமிக்க வேண்டும் எனவும் சரத் வீரசேகர கேட்டுக்கொண்டுள்ளார். (ம-7)

## பாராளுமன்றில்...

நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரோகினி குமாரி விஜேரத்ன, வடிவேல் சுரேஸ், எஸ்.ராதாகிருஷ்ணன், மனோ கணேசன், எஸ்.வேலுகுமார், கின்ஸ் நெல்சன், சமிந்த விஜேசிறி, காவிந்த ஜயவர்தன உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினரும்இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரான வடிவேல் சுரேஷ் கறுப்பு உடை அணிந்து பாராளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

மேலும் தோட்ட அதிகாரியின் அடாவடித்தனத்தை வெளிக்காட்டும் காணொளி ஆதாரத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்

தொடர்ந்து பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் வீடொன்றை நொறுக்கி வீட்டில் உள்ளவர்களை வெளியேற்றும் சட்டம் இந்நாட்டில் இருக்கின்றதா?

சமைத்த உணவுகளை வீசி வீட்டில் உள்ள பொருட்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்து கொண்ட தோட்ட அதிகாரி இன்னும் கைது செய்யப்படவில்லை உடனடியாக அவர் கைது செய்யப்பட்டு உச்சக்கட்ட தண்டனை வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

பெருந்தோட்ட காணிகள் மட்டுமே தோட்ட நிர்வாகங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது தோட்டத் தொழிலாளர்களை அல்ல. ரத்வத்தை கீழ்பிரிவு தோட்ட அதிகாரிக்கு வழங்கப்படக் கூடிய தண்டனை ஏனையவருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (ம-7)

## வாகனத்தில்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு வருகை தந்த பல்சமய தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை பௌத்த மத குரு தலைமையிலான காணி அபகரிப்புக் குழு சிறைபிடித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய மதத்தலைவர்கள் ஊடகவியலாளர்கள் கொண்ட குழுவினர் நேற்று மயிலத்தமடு பகுதிக்கு வாகனங்களில் சென்றனர்.

பண்ணையாளர்கள் தங்களது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை பார்வையிட்டு அவற்றை கேட்டறிவதற்காக களவிஜயம் மேற்கொண்டு பண்ணையாளர்களுடன் கலந்துரையாடலினை முன்னெடுத்தனர்.

இதன்பின் கலந்துரையாடிவிட்டு பகல் 12 மணியளவில் திரும்பிக் கொண்டிருந்தபோது, எல்லைப் பகுதியிலுள்ள கம்பி பாலத்தின் பகுதியில் பௌத்த தேரர் ஒருவருடன் அப்பகுதி சிங்கள மக்கள் ஒன்றிணைந்து வாகனங்களை தடுத்து நிறுத்தி வாகனங்களின் திறப்புக்களை எடுத்து அவர்களை தடுத்து வைத்தனர்.

அங்கிருந்தவர்களால் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன், அவர்களது கமராக்களும் பறிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த பௌத்த மதகுரு ஒருவர் அவர்கள் சென்ற வாகனத்தின் சாவியை அடாத்தாக பறித்ததுடன், வாகனத்தில் வைத்து உங்கள் அனைவரையும் கொளுத்துவேன் என்று அச்சுறுத்தியுள்ளார்.

சுமார் ஐந்து மணி நேரம் அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் தலையிட்டு நிலைமைகளை சுமுகநிலைக்கு கொண்டு வந்தனர். (ம-7)

## சிங்க...

சியன் லூங் (Lee Hsien Loong) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் இஸ்தானா மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது சிங்கப்பூர் பிரதமரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

இருநாட்டு தலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ பேச்சுக்களை தொடர்ந்து இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கு இடையில் காணப்படும் ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக் கொள்வது தொடர்பில் தலைவர்கள் அவதானம் செலுத்தியிருந்ததோடு, பரந்த பொருளாதார ஒருமைப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ் சமரதுங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மெகா பவர்
திகதி 22/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1562
W 04 64 65 74 77
34070

தன நிதானய
திகதி - 2023.08.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1244
O 20 33 38 44 O
18099

லக்கி 7
திகதி 22.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0040
L7 இலக்கம் 0 4
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 6 1 4 4 3 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3456
சீட்டிழுப்பு திகதி 22.08.2023
P 03 07 57 64
P 05460

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2023.08.22
சீட்டிழுப்பு இலக்கம் 523
கடகம் 02 26 48 62 கடகம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/22
சீட்டிழுப்பு இலக்கம் 5214
V 7 9 6 0 1 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2188
சீட்டிழுப்பு திகதி 2023.08.22
வர்ணம் இள நீலம்
தினம் செவ்வாய்க்கிழமை
09 35 36 60 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,478,916.40
12 25 45 57 Q

சனிதா
திகதி 2023.08.22 வெற்றி வாரம் 4349 வர்ணம் பச்சை
40 43 53 63 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,072,664.00
06 07 38 71 S

சசிரி
வெற்றி வாரம் 366
சீட்டிழுப்பு திகதி 2023.08.22
23 26 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,937,360/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3900
சீட்டிழுப்பு திகதி 2023.08.22
வர்ணம் சிவப்பு
தினம் செவ்வாய்க்கிழமை
27 36 47 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,456,284/-
01 03 06 09

கப்ருக
திகதி 22.08.2023 வெற்றி வாரம் 1364
X 01 27 38 60 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.431,152,914.20
12 42 57 66 V

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2014
சீட்டிழுப்பு திகதி : 2023.08.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,364,688/-
08 18 24 43 D
29 34 51 61 V

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16759)

076 825 7716 (ஆகாஸ்)



SILVER SHIELD

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில் (C-7110)

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள**

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**DBF & HDBF (16/09/2023)**
**(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)**

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
(AA1 - 26/08/2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -02/09/2023) (C-7101)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

**Certificate Course in English**

**Further Details :** Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917


# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

ஹப்புத்தளை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் ஒருவர் துப்பாக்கி சூட்டு காயங்களுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - ஹப்புத்தளை பிரதான வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த துப்பாக்கிச் சூடு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## சட்டத்தை...

சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் விடுத்துள்ள அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தோட்டப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மக்களைத் தூண்டும் வகையில் மக்கள் பிரதிநிதியொருவர் பொறுப்பற்ற முறையில் தெரிவித்த கருத்து தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காப்புக்காக வன்முறைக்கு பதிலடி கொடுக்க வேண்டும் எனவும் அரசாங்கமும் சட்டமும் எம்மை பாதுகாக்காது போனால் அது எமது உரிமை எனவும் பொது பாதுகாப்பு அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கு பலியாகி, சட்டத்தை கையில் எடுக்க வேண்டாம் என பெருந்தோட்டம் உட்பட ஒட்டுமொத்த மக்களையும் கேட்டுக்கொள்வதாக பொது பாதுகாப்பு அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (ம-7)


## யாழ்.YMCA இல்

**பணியாளர் வெற்றிடம்**
- ஆண் வரவேற்பு கடமையாளர் (விண்ணப்ப முடிவு: 31.08.2023)

**Table Tennis Coaching Classes**
- Table Tennis பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
- பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (16799)

**076 876 6300**
**077 820 1436**



## ஆட்கள் தேவை

பலாலி வீதி கோண்டாவில் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பல்பொருள் வியாபார நிலையத்திற்கு ஆட்கள் தேவை. (16804)

**077 831 2284**



## தையல் வேலைக்கு ஆட்கள் தேவை

கோப்பாயில் இயங்கி வரும் தையல் நிலையத்தில் பணியாற்ற பெண் பிள்ளைகள் தேவை பழக விரும்புபவர்களும் இணைந்து கொள்ள முடியும் (C-7113)

**075 918 1095**



மாணவர்களும், கட்டுமானத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்

## WORK IN UK
**WORK PERMITS**
**கட்டுமான தொழிலாளர்கள்**

- 5 YEARS WORK PERMIT
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

- கட்டட தொழிலாளர்
- நீர்க்குழாய் பொருத்துனர்
- கம்பி கட்டுபவர்
- சட்டரிங் வேலை செய்பவர்
- தச்சுத்தொழிலாளர்
- எலெக்ரீசியன் (C-7116)

போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்

CIMS COLLEGE 0777-068-777



## CANADA
**VISITOR VISA**

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

**CIMS COLLEGE** (C-7116)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 - 04 - 1969 | 20 - 08 - 2023 |

## திருமதி ஜீவசொறூபி (சொறூபி) கிருபாகரமூர்த்தி (கிருபா)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் Swiss, Basel ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜீவசொறூபி கிருபாகரமூர்த்தி கடந்த (20.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலசிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் தர்மலிங்கம் - அன்னபூபதி தம்பதியரின் அன்பு மருமகளும் கிருபாகரமூர்த்தி அவர்களின் பாசமிகு மனைவியும் மிதுர்ஷன் (இரசாயனவியல் பொறியியலாளர் சுவிஸ்), யதுர்ஷன் (மாணவன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவா(கனடா), ஜீவநந்தினி(லண்டன்), ஜீவசியாமினி(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Friedhof Horn-li, Hornliallee 70, 4125 Riehen மண்டபத்தில் நாளை (24.08.2023) வியாழக்கிழமை பி.ப 1.30 மணிமுதல் 3.30 மணி வரை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.34, பொற்பதி வீதி,
கொக்குவில். (16803)

தகவல்:
குடும்பத்தினர்.


புத்தம் புதிய வெளியீடு தற்போது விற்பனையாகின்றது...!

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் தரம் 04, 05 மாணவர்களுக்கான,




எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

## ஞானவிருட்சம்

ஆரம்பக்கல்வியில் அனுபவம் வாய்ந்த முன்னணி ஆசிரியரின் தொகுப்பில்,
**எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய 24 மாதிரி வினாத்தாள் தொகுப்பு விடைகளுடன்**
(ஒவ்வொரு வினாத்தாளும் 16 பக்கங்களை கொண்டது)

**விலை : 950.00** (C-7114)

வெளியீடு : **Unilanka's Publication & Book Depot**
No. 326, Sea Street, Colombo 11. Tel : 011 4014438
Hotline : 077 7220324 / 077 6258778



## Pharmacist தொழில் பெறுவதற்கான அறிவித்தல்

தொழில் பயிற்சி மருந்தியலாளர் ( Apprentice Pharmacist) பதிவு செய்வதற்கான குறைந்தபட்ச கல்வித்தகைமைகள் GCE O/L இல் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேலதிக 5 பாடங்களில் சித்தி, GCE A/L இல் இரசாயன பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேலதிக 2 விஞ்ஞான பாடத்தில் சித்தி, No Age Limit.

August மாதம் 1ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை Sri Lankan Medical Council www.slmc.gov.lk இணையவழி மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்ப படிவங்களை Jaffna College (வெளிவாரி பட்டப்படிப்பு) 464,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் மருந்தியலாளர் கல்வி மண்டபத்தில் நேரு Sir இடம் **077 316 4251** சனி/ ஞாயிற்றுகிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். (C-7115)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல.[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org